**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆவணி மாதம் 13 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.9/2025**

**in**

**அசல் வழக்கு எண். 383/2017**

1. P. பத்மாவதி
2. P. சத்யபிரியா
3. P. செந்தில்குமார் ... **மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்**

**// எதிர்//**

1. S. செந்தில்குமார் .... **எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K.பிரபுராம், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீசித்ரா தேவி, அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1(A) மற்றும் பிரிவு 151 ன் கீழ் பிரதிவாதி ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டி மனுதாரர்கள்/ பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுவின் சுருக்கம்:-**

1.1). அசல் வழக்கு வாதியால் பாகப்பிரிவினை பரிகாரம் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குறை தாக்கல் செய்தபோது மனுதாரர் மேற்படி ஆவணங்களின் நகல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தற்போது தான் சான்றித நகல்களை பெற்றுள்ளார். எனவே மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க வேண்டி மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே மனுவை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறார். மேற்படி மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:-**

2.1). மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மேற்படி வழக்கை இந்த எதிா மனுதாரர் / வாதி மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். 20.08.1934 ம் ஆண்டு ஆவண எண்.1502/1934 பாகசாசனப் பத்திரத்தின் சான்றிட்ட நகலை இந்த எதிர்மனுதாரர் தனது தரப்பு ஆவணமாக வழக்கு தாக்கல் செய்த பொழுதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதன் நகல் எதிர்மனுதாரர்களிடத்திலும் அளிக்கப்பட்டுள்ளது. 24.05.1987 ஆவண எண்.928/1987 கிரய பத்திரம் மேற்படி இந்த எதிர்மனுதாரரின் தாயாரின் கையெழுத்தில்லாமல் செய்யப்பட்ட கிரைய பத்திரம் ஆகும். எதிர்மனுதாரர் / வாதியின் தாய் வழிப்பாட்டனார் ராமண கவுண்டரின் மூன்று வாரிசுகளில் எதிர்மனுதாரரின் தாயாரை விட்டுவிட்டு செய்த கிரையம் ஆகையால் அது செல்லத்தக்க ஆவணமல்ல. 05.02.2007 ஆவண எண்.1442/2007 கிரைய பத்திரம் வழக்கின் எதிர்மனுதாரரின் தாயாரின் கையெழுத்தில்லாமல் செய்யப்பட்ட கிரைய பத்திரம் ஆனால் இந்த வழக்கில் செல்லத்தக்க ஆவணமல்ல. 18.07.2007 ஆவண

எண்.1088/2007 மேற்படி ஆவணமானது ஒரு பொது அதிகார ஆவணம் ஆகும். மேற்படி ஆவணமும் எதிர்மனுதாரரின் தாயாரோ அல்லது எதிர்மனுதாரரோ அவரது சகோதரிகளான மற்ற எதிர்மனுதாரர்களோ கையெழுத்திடாத காரணத்தினால் இதுவும ஒரு நிராகரிக்கத்தக்க ஆவணமாகவே கருத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

2.2). 07.03.2007 ஆவண எண்.3248/2007 கிரைய பத்திரம் இந்த ஆவணமும் மேற்படி எதிர்மனுதாரரின் தாயாரோ அல்லது எதிர்மனுதாரரோ அவரது சகோதரிகளான மற்ற எதிர்மனுதாரர்களோ கையெழுத்திடாத காரணத்தினால் இதுவும் ஒரு நிராகரிக்கத்தக் ஆவமாகவே கருதப்பட வேண்டியது அவசியமாகிறது. 18.07.2007 ஆவண எண்.8342/2007 கிரைய பத்திரம் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட கிரையம் ஆகால் இந்த கிரைய பத்திரமும் நிராகரிக்கத்தக்கதாகவே உள்ளது. 08.01.2007 ஆவண எண்.34/2007 பொது அதிகார ஆவணம் ஆகும். மேற்படி ஆவணமும் எதிர்மனுதாரரின் தாயாரோ அல்லது அவரது சகோதரிகளான மற்ற எதிர்மனுதாரர்களோ கையெழுத்திடாத காரணத்தினால் இதவும் ஒரு நிராகரிக்கத்தக்க ஆவணமாகும். ராமண கவுண்டரின் பெண் வாரிசான எதிர்மனுதாரரின் தாயாரின் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் RSR 26.11.2024 ல் வழங்கப்பட்டது செல்லத்தக்தல்ல. 26.11.2024 ம் தேதியில் நீலாம்பூர் கிராமம் க.ச.616, 617, 618 வழங்கப்பட்ட 3 வரைபடங்களும் சரியானது என எதிர்மனுதாரர் ஒப்புகொள்கிறார்.

2.3). 30.11.2024 ம் தேதியில் நீலாம்பூர் கிராமம் க.ச.617/1A மற்றும் 617/1E கணிணி சிட்டா இரண்டும் எதிர்மனுதாரரின் தாயாரின் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட காரணத்தால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. மேற்படி ஆவணங்கள கணிணி சிட்டாக்கள் இரண்டும் அவர்கள் பத்திரம் ஆவண எண்.1502/1934 “A” ஷெட்யூல்படி தவறுதலாக உள்ளது. 27.11.2024 அடங்கல் பதிவேடு எதிர்மனுதாரரின் தாயாரின் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட காரணத்தால்

ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, 28.11.2024 க.ச.617 க்கு 01.01.2005 முதல் 27.11.2004 வரை வில்லங்க சான்று செல்லத்தக்கதல்ல ஏனெனில் எதிர்மனுதாரரின் தாயார் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட காரணத்தால் ஏற்றுகொள்ளதக்கதல்ல, 26.11.2024 ல் க.ச.618/2 க்கு 01.01.1975 முதல் 22.11.2024 வரை வழங்கப்பட்ட வில்லங்க சான்று செல்லத்தக்கதல்ல, ஏனெனில் எதிர்மனுதாரரின் தாயார் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட காரணத்தால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. 28.11.2024 ல் க.ச.616 க்கு 01.01.2005 முதல் 27.11.2024 வரை வழங்கப்பட்ட வில்லங்க சான்று செல்லத்தக்கதல்ல ஏனெனில் எதிர்மனுதாரரின் தாயார் பெயரை விட்டுவிட்டு வழங்கப்பட்ட காரணத்தால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. 23.11.2025 ல் க.ச.614/1 என்பது மேற்படி வழக்கிற்கு எவ்விதத்திலும் சேர்க்கப்படாத காலை எண்ணாகும்.

2.4). மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் சகோதரிகளான பிரதிவாதிகளை 6, 7, 8, 10, 11, 12 7ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுகளான 10, 11, 12 விட்டுவிட்டு உருவாக்கப்பட்ட ஆவணங்களாகும். மேற்படி வழக்கில் மூல ஆவணமாக 1934 ம் வருடத்தில் ராமண கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் இருவருக்குமிடையே நடைபெற்ற பாகப்பிரிவினை பத்திரமே மூலப் பத்திரமாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்றுகொள்ளப்பட்ட மூலப் பத்திரத்தில் ராமண கவுண்டர் மனதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரரின் மூதாதையராவார். ராமண கவுண்டருக்கு இரண்டு ஆண் வாரிசுகள் மற்றும் ஒரு பெண் வாரிசு உள்ளனர். பெண் வாரிசுகக்கு அவரது பூர்வீக சொத்தில் எவ்வித பாகமும் இதவரை பிரித்துக்கொடுக்கப்படாத காரணத்தினாலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு வரவேண்டிய பாகத்தை இந்த எதிர்மனுதாரர் மற்றும் வழக்கின் 6, 7, 8 பிரதிவாதிகளுக்கு (7ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுகளான 10, 11, 12) சரிசமமாக பிரித்துக்கொடுக்க கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி இந்த

மனுதாரர்களே மேலே கூறியுள்ள ஆவணங்கள் அனைத்து இந்த எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரிகளை விட்டுவிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவை முற்றிலுமாக செல்லத்தக்கதல்ல முற்றிலுமாக நிராகரிக்கப்பட வேண்டியது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு :-**

5.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களை 12 சமபங்குகளாகப் பிரிக்கவும், அத்தகையை ஒரு பங்கை இந்த வாதிக்கு ஒதுக்கவும் மற்றும் தாவா செலவுத்தொகையை வழங்குமாறும் வாதி பிராத்திக்கிறார்.

5.2). மனுதாரர் சார்பில் மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் அவரது தரப்பை நிரூபிக்க வேண்டி முக்கியமான ஆவணங்கள் என்றும் மேற்படி மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டதை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3). எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய எதிரிடை சொன்னவாறு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு ஆவணங்கள் அவரது வழக்கை நிரூபிக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் என்பதால் மேற்படி மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களின் செல்லும்

தன்மை குறித்து அசல் வழக்கு தீர்ப்பில் முடிவு காணப்படும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்படி மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப் போவதில்லை.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**சூலூர்.**

Draft/ Fair Order
I.A.No.9/2025
O.S.No.383/2017
Dated:29.08.2025
DMC, Sulur